உ

கணபதி துணை.

சிவமயம்.



# பிறான்மலை வகையறா

# ஐந்துகோவில் தேவஸ்தானங்களின்

# ஸ்தலபுராணச்சுருக்கம்

மேற்படி தேவஸ்தானங்களின் டிரஸ்டி

ராவ்பகதூர்

எம். ஆர். கோவிந்தராவ் அவர்கள்

உத்திரவின்படி

[illegible]டி சங்கீத சாஹித்ய வித்வான்

இராம பாகவதரால் மொ[illegible]பெயர்த்து

**மதுரை**

மஹாலெக்ஷிமி விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

**1924.**

உ

சிவமயம்

# சதுர்வேதமங்கலக் கும்பாபிஷேகப்

# பதம்.

---

வேதாகமங்கள் துதிக்க சதுர்வேத
மங்கலம்வளர் விமலையாம்
ஆவுடைநாயகிசமேத
ருத்திரகோடீசன் மகிழ்வாக பரிவாரங்களுடனே
கும்பாபிஷேகம்பெற்றருள் புரிந்தானே.

(1)

டொண்டிநயன்டென்டொன்டித்ரீ
ருதிரோத்காரி வருடம் துலா
ரவிபுகழ் பதிமூன்றுந்தேதி
சோமவாரம் பஞ்சமியுடன்
மிருகசீர்ஷம் அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில்
சிவமறையோர் செயும்யாக
சாலைகளும் சிறந்திடவே.

(2)

ஐந்துகோவில் தேவஸ்தானங்கள் டிரஸ்டி
ராவ்பகதூர் மகா-ா-ா-ஸ்ரீ
எம். ஆர். கோவிந்தராவ் மகிழ்ந்து
பணிகளும் கும்பாபிஷேகமும்
செய்து புகழ்பெற்றார்
குன்றைராமகவி பணிந்து போற்றிடவே.

(3)

சம்பூர்ணம்.

---

உ

சிவமயம்.

# பிருன்மலை ஸ்தல புராண சங்கிரக வசனம்.

---

சூதமுனிவர் நைமிசாரண்ணியவாசியான ரிஷிகளுக்கு பிரான்மலை ஸ்தல புராணத்தைச் சொல்லுகிறார்.

தேவியானவள் கைலாசத்தில் பரமசிவனை வணங்கி யோக மார்க்கத்தை உபதேசிக்கவேணுமென்று பிரார்த்திக்க பரமசிவனும் அவ்விதமே உபதேசித்து பாண்டிய தேசத்தில் சமயாசாரியர்களால் பாடல் பெற்ற பாண்டிபதிரான்கினுள் ஒன்றாகிய கடோரகிரி என்ற பிரான்மலையில் பாதாளத்தில் நவரத்தின சபா மண்டபத்தில் சர்ப்பங்களின் பிரார்த்தனையின்படி ஜோதிரூபமான சரீரத்தால் தாண்டவம் செய்துகொண்டிருக்கிற நம்மைத் தரிசித்துக்கொண்டு சப்த மாதாக்களோடும் யோகத்தைச்செய்துகொண்டிரு நாமும் அவடம்வந்து வேண்டியவரத்தை தருவோமென்று உத்திரவு அளிக்க அவ்விதமே தேவியும் பிரான்மலைக்கு வந்து யோகத்தைச்செய்துகொண்டிருக்கையில்

தேவியின் யோக அக்கினியை சகியாமல் தேவர்கள் பரமசிவனிடம் தெரிவிக்க

பரமசிவனும் பிரான்மலைக்கு வந்து தேவியின் சமீபத்தை அடைந்து தன் ரூபத்தைத்தேவியினிடத்தில் கலந்துகொள்ள தேவியின் யோக அக்கினியானது லிங்கவடிவமாகத்தோன்ற சகல தேவர்களும் முனிவர்களும் உக்கிரலிங்கத்தை தெரிசித்தார்கள். தேவியும் உக்கிரலிங்கத்தைப்பூஜித்துக்கொண்டும் யோகத்தைச் செய்துகொண்டும் விளங்குகின்றாள். அவ்விதம் இருக்கையில் சகல தேவர்களும் பரமசிவனை வணங்கி இவ்விடத்தில் தேவியை கலியாணம் செய்துகொள்ளவேணும் என்று வேண்டிக்கொள்ள சிவபிரானும் சம்மதித்து சிவபிரான் உத்திரவுப்படி தேவர்களும் விசுவகர்மாவை அழைத்து கலியாண மண்டபத்தை அலங்கரிக்கும்படிசெய்ய, சிவபிரானும் சுபமுகூர்த்தத்தில் தேவியின்கரத்தைப்பிடித்தார். தேவர்களும் புஷ்பமாரி பொழிந்தார்கள். பின்பு

சிவபிரான் தேவர்களைப்பார்த்து நாம் இந்த கலியாணக்கோலத்துடன் மலையினுடைய சிகரத்திலிருக்கிற குகையில் ரகசியத்தில் வசிப்போம் நீங்களும் இம்மலையின் நான்கு திக்குகளிலும் வசித்துக்கொண்டிருங்களென்று உத்திரவுசெய்ய தேவர்களும் அவ்விதமே பூமியில் அமிருதேசுவரிசமேத உக்கிரகிரீசரையும் அந்தரத்தில் விசாலாக்ஷிசமேத விசுவேசரையும் வைரவரையும் ஸ்வர்க்கத்தில் குயிலின் மொழியாள்சமேத மங்கைபாகரையும், சபாநாதரையும், தரிசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

குஷ்டம் முதலிய மஹாரோகங்களை நிவர்த்திசெய்யக்கூடிய குட்டாச்சுனை தேனாடி முதலிய நூற்றெட்டு தீர்த்தங்களும் இருக்கிறது.

சூரியசந்திரர்கள் போக்குவரத்துக்கு தடங்கலாக உயர்ந்திருந்த பிரான்மலையை போக்குவரத்துக்குத் தடையில்லாமல் செய்துதரவேணும் என்று தேவர்கள் கைலாசத்தில் சிவபிரானைப் பிரார்த்திக்க சிவபிரானும் வயிரவரை அனுப்ப வயிரவரும் தன் சூலத்தால் மலையின் உயரத்தைத்தணித்தும் சூலாயுதத்தால் தீர்த்தம் ஒன்று ஏற்படுத்தியும் பிரான்மலையின் மத்திய பாகத்தில் விளங்கிக்கொண்டிருக்கிறார்.

அகஸ்தியமுனிவர் பிரான்மலைக்கு வந்து சிவபிரானை வணங்கி இந்தக்கலியாண கோலத்தை நித்தியமும் நான் தெரிசிக்க வேணுமென்று பிரார்த்திக்க சிவபிரானும் அவ்விதமே தரிசிப்பாயாக என்றும் இமமலையையும் நீ உன்னிருப்பிடமான பொதிகை மாமலையிலிருந்துகொண்டு லிங்கவடிவமாக தெரிசிப்பாயாக என்றும் திருவாய்மலர்ந்தருளினார். அவ்விதமே அகஸ்தியரும் தரிசித்துக்கொண்டே இருக்கிறார்.

பின்பு தூர்வாச முனிவர் பிரம்மா முருகக்கடவுள் உபமன்னியுமஹரிஷி, அங்கிரசு முதலான சப்தரிஷிகள், நித்தியானந்தர் முதலான சித்தர்கள், குபேரன், தேவேந்திரன் முதலியவர்களும் சிவபிரானைப் பூஜித்தார்கள்.

பிரான்மலை ஸ்தலபுராண சங்கிரக வசனம்

ச ம் பூ ர் ண ம் .

சிவமயம்.

# பிருன்மலை தேவஸ்தானம் உள்க்கிடை சதுர்வேதமங்கல ஸ்தலபுராண சங்கிரக வசனம்.

---

கைலாசத்தில் சகலதேவர்களும், முனிவர்களும், பூதகணங்களும் நிறைந்த சபையில் சிவபிரான் பார்வதிதேவியோடு வீற்றிருக்கும்பொழுது நான்கு வேதங்களும் சிவபிரானை வணங்கி நாங்கள் பூலோகத்தில் கோடிருத்திரர்களாக உம்மைப்பூஜிக்க வேணும் என்று பூரார்த்திக்க அவ்விதமே சிவபெருமானும் பாண்டியநாட்டில் பிருன்மலைக்கு தென்பக்கத்தில் ஐந்து மைல் தூரத்தில் இருக்கிற வில்வவனத்தில் பிரஸன்னமாகிறோம் நீங்களும் பூஜித்து வேண்டியவரங்களைப்பெறுங்கள் என்று திருவாய் மலர்ந்தருள. அவ்விதமே நான்கு வேதங்களும் வில்வவனத்தை அடைந்து ஆவுடைநாயகிசமேத ருத்திரகோடீசுவரரை விதிப்படி பூஜித்து சிவபிரான் உத்திரவினால் தாங்கள் பூஜித்ததற்கு அடையாளமாக வில்வவனத்திற்கு சதுர்வேதமங்கலம் என்ற பெயரையும் வைத்து சிலாபுஷ்கரிணீ (கல்லூரணி) என்ற தீர்த்தத்தையும் உண்டுபண்ணி நான்கு வேதங்களும் அடைந்த பெருமையை சூதமுனிவர் நைமிசாரண்ணியவாசிகளுக்கு சொல்லி அருளினார்.

இப்பொழுதும் இந்த ஸ்தலத்தில் ஆவணி மாதத்தில் பிரம்மோத்ஸவமும் ஆவுடைநாயகிக்கும் ருத்திரகோடீசுவரருக்கும் திருக்கலியாணமும் வெகு சிறப்பாக நடந்துவருகிறது.

## அரளிப்பாறை.

இந்த ஸ்தலத்திற்கு கிழக்குப்பக்கத்தில் ஒரு மைல் தூரத்தில் இருக்கிற அரளிப்பாறை என்ற மலையின்மீது தண்டாயுதபாணியாக எழுந்தருளி இருக்கும் சுப்பிரமணியரானவர் மேற்கு முகம் நோக்கி ஆவுடைநாயகிசமேத ருத்திரகோடீசுவரரை தெரிசித்துக்கொண்டுவருகிறார். மாசி மாதத்தில் மக உத்ஸவமும்

மக நக்ஷத்திர தினத்தில் சரவணப்பொய்கையில் தீர்த்தம் கொடுத்தும் விளங்கிக்கொண்டிருக்கிறார்.

அன்று பகலில் வெகு சிறப்பாக மஞ்சிவிரட்டும் நடந்து வருகிறது.

கூட்டம் கூட்டமாக ஜனங்கள் வந்து இந்தக்காக்ஷியைக் கண்டுகளித்து காவடிகளும், காணிக்கைகளும், செலுத்திவருவது யாவரும் அறிந்தவிஷயமே.

சதுர்வேதமங்கல ஸ்தலபுராண சங்கிரக

வசனம்

சம்பூர்ணம்.

உ

சிவமயம்.

# கொடுங்குன்றம் (பிரான்மலை)

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

# தேவாரம்.

## பண் நட்டபாடை.

---

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலிவெய்தும் மழைமேகங்கிழித்தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங்குன்றம்
ஆனிற்பொலிவைந்தும் அமர்ந்தாடியுலகேத்தத்
தேனிற்பொலிமொழியாளோடுமேயான்றிருநகரே. (1)

மயில்புல்குதண்பெடை யோடுடனாடும்வளர்சாரற்
குயிலின்னிசைபாடுங்குளிர் சோலைக்கொடுங்குன்றம்
அயில்வேன்மலி நெடுவெஞ்சுடரனலேந்திநின்றாடி
யெயின்முன்படவெய்தானவன்மேயவ்வெழினகரே. (2)

மிளிரும்மணிபைம்பொன்னொடுவிரைமாமலருந்திக்
குளிரும் புனல்பாயுங்குளிர் சாரற்கொடுங்குன்றங்
கிளர்கங்கையொடிளவெண்மதி கெழுவுஞ்சடைதன்மேல்
வளர்கொன்றையுமதமத்தமும் வைத்தான்வளநகரே. (3)

பருமாமதகரியோடரி யிழியும்விரிசாரற்
குருமாமணி பொன்னோடிழியருவிக்கொடுங்குன்றங்
பொருமாவெயில்வரை விற்றருகணையிற்பொடிசெய்த
பெருமானவனுமையாளொடுமேவும் பெருநகரே. (4)

மேகத்திடிகுரல்வந்தெழவெருவிவ்வரையிழியுங்
கூகைக்குலமோடித்திரி சாரற்கொடுங்குன்றந்
நாகத்தொடுமிளவெண்பிறை சூடிந்நலமங்கை
பாகத்தவனிமையோர்தொழமேவும்பழநகரே. (5)

கைம்மாமதகரியின்னின மிடியின்குரலதிரக்
கொய்ம்மாமலர்ச்சோலை புகமண்டுங்கொடுங்குன்ற
மம்மானெனவுள்கித்தொழுவார்கட் கருள்செய்யும்
பெம்மானவனிமையோர் தொழமேவும்பெருநகரே. (6)

மரவத்தொடுமணமாதவி மௌவல்லதுவிண்ட
குரவத்தொடுவிரவும் பொழில்சூழ்தண்கொடுங்குன்ற
மரவத்தொடுமிளவெண்பிறை விரவும்மலர்க்கொன்றை
நிரவச்சடைமுடிமேலுடன் வைத்தானெடுநகரே. (7)

முட்டாமுதுகரியின்னினமுதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனையவைமண்டி நின்றாடுங்கொடுங்குன்ற
மொட்டாவரக்கன்றன் முடியொரு பஃதவையுடனே
பிட்டானவனுமையாளொடுமேவும் பெருநகரே. (8)

அறையும்மரிகுரலோசையையஞ்சியடுமானை
குறையும்மனமாகிம்முழைவைகுங்கொடுங்குன்ற
மறையும்மவையுடையானென நெடியானெனவிவர்க
ளிறையும்மறிவொண்ணாதவன் மேயவெழினகரே. (9)

மத்தக்களிறாளிவ்வரவஞ்சிமலைதன்னைக்
குத்திப்பெருமுழைதன்னிடைவைகுங் கொடுங்குன்றம்
புத்தரொடு பொல்லாமனச்சமணர்புறங்கூறப்
பத்தர்க்கருள் செய்தானவன்மேயபழநகரே. (10)

கூனற்பிறைசடைமேன் மிகவுடையான் கொடுங்குன்றை
கானற்கழுமலமாநகர்த்தலைவன்னலகவுணி
ஞானத்துயர்சம்பந்தனநலங்கொடமிழ்வல்லா
ரூனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்துமெழிலோரே. (11)

திருச்சிற்றம்பலம்.

# கொடுங்குன்றம் (பிரான்மலை)

## திருப்புகழ்

(1) அனங்கனம்பொன்றஞ்சுந்தங்கும் கண்களாலே
அடர்ந்தெழும்பொன்குன்றங்கும்பங் கொங்கையாலே
முனிந்துமன்றங்கண்டுந்தண்டும் பெண்களாலே
முடங்குமென்றன்றொண்டுங்கண்டின் றின்புறுதோ
தெனந்தெனந்தெந்தெந்தெந்தெந் தெந்தெனனா
செறிந்தடர்ந்துஞ்சென்றும்பண்பின் றும்பிபாட
குனிந்திலங்குங்கொம்புங்கொந்துந் துன்றுசோலை
கொழுங்கொடுந்தின்குன்றந்தங்குந் தம்பிரானே

(1)

(2) எதிர்பொருது கவிகடின
கச்சுக்களும் பொருது
குத்திக்கிறந்து மலை
யிவைகளென வதிம்ருகம
தப்பட்டு நின்றொழுகி
முத்துச் செறிந்தவட
மெனுநிகள மவையறவு
கைத்திட்டணைந்து கிரி
னிற்கொத்து மங்குசநெ ருங்குபாகர்.

எதிர்பரவ உரமிசைது
கைத்துக்கிடந்துடல்ப
தைக்கக்கடிந்து மிக
இரதிபதி மணிமவுலி
யெற்றித்திரி யம்பகனு
முட்கத்திரண் டிளகி
யிளைஞருயிர் கவளமென
முட்டித்த சைந்தெதிர்பு
டைத்துச்சினந்துபொரு கொங்கையானை.

பொதுவில் விலை யிடுமகளிர்
பத்மக்கரந்தழுவி
யொக்கத்து வண்டமளி
புக இணைய வரிபரவு
நச்சுக்கருங்கயல்கள்
செக்கச்சிவந்தமுது
பொதியுமொழி பதற அளை
கக்கற்றையுங்குலைய
முத்தத்துடன் கருணை தந்துமேல்வீழ்.

புதுமைதருகலவிவலை
யிற்பட்டழுந்தியுயிர்
தட்டுப்படுந்திமிர
புணரியுத தியில் மறுகி
மட்டற்ற இந்திரிய
சட்டைக்குரம்பையழி
பொழுதினிலும் அருள்முருக
சுத்தக்கொடுங்கிரியி
னிர்த்தச்சரண்களை மறந்திடேனே.

திதிதிதிதி திதிதிதிதி
திக்திக்தி திங்கிதிதி
தக்கக்க தந்தகத
தெதததெதத தெதததெதத
தெத்தெத்தெ தெந்ததெதத
டிக்கட்டி கண்டிகட
ஜெகணகெண கெணஜெகுத
தெத்தித்த்ரி யந்திரித
தக்கத்தகுந்தகுர்த திங்கிதிதோ.

திகுடதிகு தொகுடதொகு
திக்கட்டி கண்டிகட
டக்கட்ட கண்டகட

டிடிடுடுடு டிடிடுடுடு
டிக்கட்டி கண்டிகட
டுட்டுட்டு டுண்டுடுடு
திகுகுதிகு திகுகுகுகு
திக்குத்தி குந்திகுகு
குக்குக்கு குங்குகுகு என்று தாளம்.

முதிர்திமிலை கரடிக்கையி
டக்கைக்கொடுந்துடி
டுக்கைப்பெரும்பதலை
முழவுபல மொகுமெகென
வொத்திக்கொடும் பிரம
சுத்திக்களும் பரவ
முகடுபுகு வெருகொடிகள்
பக்கத்தெழுந்தலைய
மிக்கக்கவந்தநிரை தங்கியாட

முதுகழுகு கொடி கருட
னைக்கத்திரண்டுவர
வுக்ரப்பெருங்குருதி
முழுகியெழு பயிரவர்ந
டிக்கிட்டகண்டமும் வெ
டிக்கத்து ணிந்ததிர
முடுகிவரு நிசிசரரை
முட்டிச்சிரந்திருகி
வெட்டிக்களம்பொருத் தம்பிரானே.

(2)

சிவமயம்.

# திருப்புத்தூர் ஸ்தல புராண சங்கிரக வசனம்.

---

சூதபுராணிகர் நைமிசாரண்ணியவாசியான ரிஷிகளுக்கு திருப்புத்தூர் ஸ்தல புராணத்தைச் சொல்லுகிறார்.

கைலாசத்தில் சிவபெருமானை கௌரியானவள் நமஸ்கரித்து மஹரிஷிகளுக்கு அநேக இடங்களில் நடன தெரிசனம் காட்டியதுபோல எனக்காகவும் நடன தெரிசனம் காட்டி அருள வேணுமென்று பிரார்த்திக்க சிவபெருமானும் பூலோகத்தில் பாண்டியதேசத்தில் மதுரைக்கு கிழக்கில் பாண்டிபதினான்கினுள் ஒன்றாகியதும் சமயாசாரியர்களால் பாடல்பெற்றதுமான திருப்புத்தூர் என்ற கொன்றைவனத்தில் சென்று தவஞ்செய்வாயாகில் உன் எண்ணம் நிறைவேறுமென்று அருளிச்செய்ய கௌரியும் வந்து சிவகங்கைத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி நூறாண்டு தவஞ்செய்ய சிவபெருமானும் மாசிமாதம் மக நக்ஷத்திரத்தில் கொன்றைவனம் பொருந்திய திருப்புத்தூரில் தோன்றி கௌரிக்கு முன் திருத்தாண்டவம் ஆடினார். அதைக்கண்டு கௌரியும் மனமகிழ்ந்து சிவகாமசுந்தரி என்ற பெயரோடும் சுவாமிக்கு ஈசானதிக்கில் விளங்கிக்கொண்டிருக்கிறாள்.

அஃதுபோலவே பங்குனிமாதம் உத்திர நக்ஷத்திரத்தில் லக்ஷிமிக்காக தாண்டவம் செய்தார். லக்ஷிமியும் மனமகிழ்ந்து தீர்த்தத்துக்கும் சுவாமிக்கும் ஊருக்கும் தன்னுடைய பெயரை அதாவது (ஸ்ரீதளிபுரம் ஸ்ரீதளீசன் ஸ்ரீதளிதீர்த்தம் என்று) விளங்கும்படிசெய்து தன்னிருப்பிடம் சேர்ந்தாள்.

முன் காலத்தில் அசுரர்களால் பீடிக்கப்பட்ட தேவர்கள் காசியை அடைந்து ரிஷிகளிடம் தெரிவித்துக்கொள்ள அவர்களும் ருத்திரயாகத்தைச்செய்ய அதினின்றும் வயிரவர் தோன்றி நிற்க தேவர்கள் துதித்து விராடபுரியில் அசுரர்கள் செய்யும்

கொடுமையை தெரிவிக்க வயிரவரும் விராடபுரியை அடைந்து அசுரர்களை ஸம்ஹரித்து கொன்றைவனம் பொருந்திய திருப்புத்தூரில் வந்து எண்ணூறாண்டு யோகம் செய்து ஸ்ரீ தளீசன் கிருபையினால் யோக குருவென்ற பெயரோடும் சகல உயிர்களையும் பாது காத்துக்கொண்டு அவ்விடத்தில் இருக்கும் காலத்தில் கவுண முனிவனுக்குச்செய்த அபசாரத்தினால் பூதரூபத்தை அடைந்த ஜயந்தன் (இந்திரனுடைய புத்திரன்) கொன்றைவனத்தை அடைந்து வயிரவரை தெரிசித்து சாபத்தை நிவர்த்திக்கவேணுமென்று பிரார்த்திக்க வயிரவரும் சாபத்தை நிவர்த்திசெய்து வருஷந்தோறும் சித்திரை மாதம் முதல் வெள்ளிக்கிழமையில் பூஜை செய்யும் படிக்கும் ஆக்ஞாபிக்க அவ்விதமே ஒப்புக்கொண்டு ஜயந்தனும் விடைபெற்று தன்னிருப்பிடஞ்சேர்ந்தான்.

வருஷந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை அன்று இப்பவும் ஜயந்தன் பூஜை நடந்துவருகிறது.

மதுரைமா நகரத்தை ஆண்ட ஆதிசந்திரபாண்டியன் திருப்புத்தூரை அடைந்து ஸ்ரீ தளீசருக்கு அநேக திருப்பணிகளையும் உத்ஸவங்களையும் நடத்தி அநேக பிராமணர்களுக்கு வீடு, பூமி முதலிய தானங்கள் செய்தும் ஸ்ரீ தளீசன் கிருபையைப்பெற்று தன்னிருப்பிடஞ்சேர்ந்தான்.

திருப்புத்தூர் ஸ்தல புராண

சங்கிரக வசனம்

சம்பூர்ணம்.

உ

சிவமயம்.

# திருப்புத்தூர்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## தேவாரம்.

---

பண் தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்மு வெறியார்பொழிற்சோலை
திங்களோடு திளைக்குந்திருப்புத்தூர்
கங்கைதங்கு முடியாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (1)

வேனல்விம்மு வெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்திளைக்குந்திருப்புத்தூர்
ரூனமின்றியுறைவாரவர்போலு
மேனமுள்ளு மெயிரும்புனைவாரே. (2)

பாங்குநல்லவரிவண்டிசைபாடத்
தேங்கொள்கொன்றை திளைக்குந்திருப்புத்தூ
ரோங்குகோயிலுறைவாரவர்போலுந்
தாங்குதிங்க டவழ்புன்சடையாரே. (3)

நாறவிண்டநறுமாமலர் கவ்வித்
தேறல்வண்டுதிளைக்குந்திருப்புத்தூ
ரூறல்வாழ்க்கை யுடையாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே (4)

இசைவிளங்குமெழில் சூழ்ந்தியல்பாகத்
திசைவிளங்குபொழில் சூழ்திருப்புத்தூர்ப்
பசைவிளங்கப்படித்தாரவர்போலும்
வசைவிளங்கும்வடிசேர்நுதலாரே (5)

வெண்ணிறத்த விரையோடலருந்தித்
தெண்ணிறத்த புனல்பாய்திருப்புத்தூ
ரொண்ணிறத்த வொளியாரவர்போலும்
வெண்ணிறத்த விடைசேர்கொடியாரே. (6)

நெய்தலாம்பல் கழுநீர்மலர்ந்தெங்குஞ்
செய்கண்மல்கு சிவனார்திருப்புத்தூர்த்
தையல்பாகமகிழ்ந்தாரவர்போலு
மையுணஞ்சமருவுமிடற்றாரே. (7)

சுருக்கமெல்லாங்கமழும்பொழிற்சோலைத்
திருக்கொள்செம்மை விழவார்திருப்புத்தூ
ரிருக்கவல்ல விறைவாரவர்போலு
மரக்கனொல்க விரலாலடர்த்தாரே. (8)

மருவியெங்கும்வளருமடமஞ்ஞை
தெருவுதோறுந்திளைக்குந்திருப்புத்தூர்ப்
பெருகிவாழும்பெருமானவன்போலும்
பிரமன்மாலு மறியாப்பெரியோனே. (9)

கூறைபோர்க்குந்தொழிலாரமண்கூற
றேறல்வேண்டாதெளிமின்றிருப்புத்தூ
ராறுநான்குமமர்ந்தாரவர்போலு
மேறுகொண்டகொடி யெம்மிறையாரே. (10)

நல்லகேள்விஞான சம்பந்தன்
செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்ச்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று
மல்லறீரு மவலமடையாவே (11)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# திருப்புத்தூர்

## திருநாவுக்கரசுநாயனர்

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

புரிந்தமரர்தொழுதேத்தும்புகழ்தக்கான்காண்
போர்விடையின்பாகன்காண்புவனமேழும்
விரிந்துபலவுயிராகிவிளங்கினான்காண்
விரைக்கொன்றைக்கண்ணியன்காண் வேதநான்குந்
தெரிந்துமுதல்படைத்தோனைச்சிரங்கொண்டோன்காண்
டீர்த்தன்காண்டிருமாலோர்பங்கத்தான்காண்
டிருந்துவயல் புடைதழுவுதிருப்புத்தூரிற்
றிருத்தளியான் காணவனென்சிந்தையானே. (1)

வாராருமுலைமங்கை பங்கத்தான்காண்
மாமறைகளாயவன்காண்மண்ணும்விண்ணும்
கூரார்வெந்தழலவனுங்காற்றுநீருங்
குலவரையுமாயவன்காண் கொடுநஞ்சுண்ட
காராருங்கண்டன்காணெண்டோளன்காண்
கயிலைமலைப்பொருப்பன்காண்விருப்போடென்றுந்
தேராருநெடுவீதித்திருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (2)

மின்காட்டுங்கொடிமருங்கு லுமையாட்கென்றும்
விருப்பவன்காண்பொருப்புவலிச்சிலைக்கையோன்கா
ணன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறி
நற்கனகக்கிழிதருமிக்கருளினோன்காண்
பொன்காட்டக்கடிக்கொன்றை மருங்கேநின்ற
புனக்காந்தள் கைகாட்டக்கண்டுவண்டு
தென்காட்டுஞ்செழும்புறவிற்றிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (3)

ஏடேறுமலர்க்கமலத்தயனுமாலு
மிந்திரனும்பணிந்த விருக்கின்றான்காண்
டோடேறுமலர்க்கடுக்கை வன்னிமத்தந்
துன்னியசெஞ்சடையான்காண் டுகடீர்சங்க
மாடேறிமுத்தீனுங்கானல்வேலி
மறைக்காட்டுமாமணிகாண் வளங்கொண்மேதி
சேடேறிமடுப்படியுந்திருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென் சிந்தையானே. (4)

கருமருவுவல்வினை நோயகற்றினான்காண்
காமருபூங்கச்சியேகம்பத்தான்காண்
பெருமருவு பேருலகிற்பிணிகடீர்க்கும்
பெரும்பற்றத்தண்புலியூர் மன்றாடிகாண்
டருமருவு கொடைத்தடக்கையளகைக்கோன்றன்
சங்காத்தியாரூரிற்றனியானைகாண்
டிருமருவு பொழில்புடைசூழ்திருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (5)

காம்பாடுதோளுமையாள்காணநட்டங்
கலந்தாடல்புரிந்தவன்காண்கையில்வெய்ய
பாம்பாடப்படுதலையிற்பலிகொள்வோன்காண்
பவளத்தின் பருவரைபோற்படிமத்தான்காண்
டாம்பாடுசினவிடையே பகடாக்கொண்ட
சங்கரன்காண்பொங்கரவக்கச்சையோன்காண்
சேம்பாடுவயல்புடைசூழ்திருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (6)

வெறிவிரவுமலர்க்கொன்றை விளங்குதிங்கள்
வன்னியொடுவிரிசடைமேன்மிலைச்சினான்காண்
பொறிவிரவுகதநாகமக்கினோடு
பூண்டவன்காண்பொருபுலித்தோலாடையான்கா
ணறிவரிய நுண்பொருள்களாயினான்கா
ணயிரம்பேருடையவன்காணந்தண்கானற்
செறிபொழில்சூழ்மணிமாடத்திருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென் சிந்தையானே. (7)

புக்கடைந்தவேதியற்காய்க்காலற்காய்ந்த
புண்ணியன்காண் வெண்ணகை வெள்வளையாளஞ்ச
மிக்கெதிர்ந்தகரிவெருவவுரித்தகோன்காண்
வெண்மதியைக்கலைசேர்த்ததண்மையோன்கா
ணக்கரும்புபெரும்புன்னைநெருங்குசோலை
யாரூருக்கதிபதிகாணந்தண்டென்ற
றிக்கணைந்துவருமருங்கிற்றிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென் சிந்தையானே. (8)

பற்றவன்காணேனோர்க்கும் வானோருக்கும்
பராபரன்காண்டக்கன்றன் வேள்விசெற்ற
கொற்றவன்காண் கொடுஞ்சினத்தையடங்கச்செற்று
ஞானத்தைமேன்மிகுத்தல் கோளாக்கொண்ட
பெற்றியன்காண்பிறங்கருவிக்கழுக்குன்றத்தெம்
பிஞ்ஞகன்காண் பேரெழிலார்காமவேளைச்
செற்றவன்காண்சீர்மருவுதிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென் சிந்தையானே. (9)

உரமதித்தசலந்தரன்றனாகங்கீண்ட
வே[illegible]ராழிபடைத்தவன்காணுலகுசூழும்
வரமதித்தகதிரவனைப்பற்கொண்டோன்காண்
வானவர்கோன்புரிநெரிவல்லாளன்கா
ணரமதித்துச்செம்பொன்னிரம்பூணு
வணிந்தவன்காணலைகடல்சூழிலங்கைவேந்தன்
சிரநெரித்தசேவடிகாண்டிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென் சிந்தையானே. (10)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# மயூரகிரி ஸ்தல புராண சங்கிரக வசனம்.

---

முன் காலத்தில் நைமிசாரண்ணியத்தில் சூதமுனிவரை ரிஷிகள் நமஸ்கரித்து முருகக்கடவுளுடைய சரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருளவேணுமென்று பிரார்த்திக்க அவ்விதமே சூதமுனிவரும் சைவபுராணத்தில் ருத்திர ஸம்ஹிதையில் சொல்லப்படும் குன்னக்குடியின் பெருமையைப் பிரம்மா நாரதருக்கு உபதேசித்தபடி நானும் உங்களுக்குச்சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சொல்லுகிறார்.

ஆதியில் பரமசிவன் தன் சக்தியை இரண்டுபாகமாக்கி ஒரு பாகத்தை போக சக்தியாகவும் மற்றொரு பாகத்தை முருகக்கடவுளாகவும் உண்டாக்கி ஞான சக்தியை முருகக்கடவுளுடைய ஹிருதயத்தில் இருக்கும்படிக்கும் இச்சாசக்தி கிரியாசக்தி இதுகளை ஆயிதங்களாகச்செய்துகொடுத்தும் ஞானசக்திதரன், குகன், விசாகன் என்று பெயரிட்டும் கைலாசத்தின் இடதுபக்கத்தில் கோவிலை உண்டாக்கி அவ்விடத்திலிருந்து சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அநுக்கிரகம் என்ற ஐந்து தொழிலையும் செய்ய அதிகாரத்தையும் வாகனமாக மயிலையும், சகாயமாக ஜயந்தன் முதலிய கணங்களையும் கொடுத்து மேல் சொன்ன ஸ்தானத்துக்கு அனுப்ப அவ்விதமே முருகக்கடவுளும் வீற்றிருக்கும் பொழுது

தினந்தோறும் தெரிசனத்துக்காக வந்துகொண்டிருந்த பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்கள் வாசலில் காவலாயிருக்கும் மயிலினிடத்தில் உன்னைப்போல் மயில் வாகனமாயிருப்பதை உத்தேசித்து சூரன் தன் தம்பிகளாகிய பதுமன், சிங்கன், தாரகன், இவர்களோடு காஞ்சிபுரத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கிறான் என்று தெரிவிக்க

இதைக்கேட்ட மயிலானது மனவருத்தம் கொண்டிருப்பதை முருகக்கடவுள் அறிந்து தவஞ்செய்துகொண்டிருக்கும்

சூராதி நால்வரையும் கணங்களாகச்செய்து தன் சமீபத்தில் வைத்துக்கொண்டார். பிறகு வழக்கம்போல் தெரிசனத்துக்குவந்த பிரம்மா விஷ்ணுக்கள் தங்கள் வாகனங்களை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளேசென்ற சமயத்தில் சூராதியான கணங்களும் தங்களுடைய எண்ணத்தைக்கெடுத்தவர்களுடைய வாகனங்களைக்கண்டு மயிலினிடத்தில் அன்னமும் கருடனும் வேகமாய் பறந்து செல்வதில் எங்களைக்காட்டிலும் மயிலுக்கு சாமர்த்தியமில்லையென்றும் குறைவாகவும் பேசினதுகள் கோள் சொல்ல, மயில் கோபங்கொண்டு அன்னபக்ஷியையும் கருடனையும் விழுங்கிவிட்டது.

திரும்ப பிரம்மா விஷ்ணுக்கள்வந்து தங்கள் வாகனங்களைக்காணுமல் முருகக்கடவுளிடம் தெரிவிக்க முருகக்கடவுளும் இது மயிலினல் நடந்ததென்று அறிந்து மயிலை வாகனங்களைக் கக்கும்படி செய்ய பிரம்மா விஷ்ணுக்கள் தங்கள் வாகனங்களில் ஏறி இருப்பிடஞ்சென்றார்கள்.

பின்பு முருகக்கடவுளும் மயிலைப்பார்த்து நீ என் பக்தர்களுக்கு அபராதஞ்செய்ததினல் நீ மலையாய்ப்போகக்கடவது என்று சபிக்க மயிலும் வருத்தமடைந்து நான் செய்த பிழையைப்பொருத்து சாபவிமோசனம் தரவேணுமென்று பிரார்த்திக்க முருகக்கடவுளும் நீ பாண்டியதேசத்தில் அரசவனம் என்ற குன்னக்குடியில் மலையாக இரு, நாம் ஆறுமுகத்தோடு அங்குவந்து உன் சாபத்தை நிவர்த்திசெய்து நமது சாரூப்பிய பதவியைக் கொடுப்போம் என்றும் திருவாய்மலர்ந்தருள மயிலும் விடைபெற்று அவ்விதமே குன்னக்குடியில் வந்து மலையாக இருக்க, பின்பு கோள்சொன்ன சூராதிகளை நீங்கள் அசுரர்களாய்ப்போகக்கடவது என்று சாபத்தைக்கொடுக்க, அவ்விதமே சூராதிகணங்களும் அசுரர்களாகித் தேவர்களை இமிசித்துக்கொண்டிருக்க இமிசியைச்சகியாத தேவர்களும் பரமசிவனிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொள்ள பரமசிவனும் ஆறுமுகத்தோடு முருகக்கடவுளை சூரசம்ஹாரத்துக்காக தேவர்களோடு அனுப்ப

ஆறுமுகக்கடவுளும் பூமியில்வந்து சூராதிகளை சம்ஹரித்து தேவர்களுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ண தேவேந்திரன் தன்

பெண்ணாகிய தேவநாயகியைத் திருப்பரங்குன்றத்தில் கலியாணஞ்செய்துகொடுக்க திருத்தணிகையில் வள்ளி நாயகியையும் கலியாணஞ்செய்துகொண்டு குன்னக்குடிக்கு வந்து மயிலுக்குச் சாபவிமோசனம்செய்தும் மயிலை இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை சாரூப்பியபதவியை அடையும்படிக்கும் மலையாக இருக்கும்படி மற்றொருபாகத்தையும் செய்ய மயிலானது ஆறுமுகக்கடவுளை வணங்கி மலைரூபமாகிய என்மீது வள்ளிதேவநாயகியோடு ஆறுமுகத்துடன் வீற்றிருக்கவேணுமென்றும் சரவணப்பொய்கையை உண்டுபண்ணவேணும் என்றும் பிரார்த்திக்க ஆறுமுகக்கடவுளும் அவ்விதமே சரவணப்பொய்கையும் உண்டுபண்ணி வள்ளிதேவநாயகியோடு மலையின்மீது வாசம்பண்ணிக்கொண்டுவருகிறார்.

பின்பு மயிலும் ஆறுமுகக்கடவுளின் உத்திரவினால் சரவணப்பொய்கைக்கு மேல்புறத்தில் தன் பெயருள்ள தீர்த்தத்தையும் மலைக்குத்தென்பக்கத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டை பண்ணியும் ஆறுமுகக்கடவுளின் சாரூப்பியத்தை அடைந்தது. அது முதல் அரசவனமென்ற குன்னக்குடி மயில்மலை என்று சொல்லப்படுகிறது.

பின்பு கிருஷ்ணபகவான், வசிஷ்டர், விசுவாமித்திரர், நாரதர், பிரம்மா, கெருடன், தேவேந்திரன், சூரியன், மன்மதன் முதலியவர்கள் ஆறுமுகக்கடவுளைப்பூஜித்து அனுக்கிரகம் பெற்றார்கள்.

அகஸ்த்திய மஹரிஷியும் குன்னக்குடியில் வந்து ஆறுமுகக்கடவுளைப்பூஜித்து குன்னக்குடிக்கு வடபுறத்திலிருக்கிற ஆற்காடு என்ற வனத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டைபண்ணித் தேனை அபிஷேகம் செய்யும்பொழுது அது ஆறாகப்பெருகியதால் அது முதல் அந்த ஆறு தேனாறு என்று விளங்கிவருகிறது.

பிறகு பாண்டவரும் ஆறுமுகக்கடவுளைபூஜித்து [illegible]யின் மேல்புறத்தில் பாண்டவதீர்த்தத்தையும் தீர்த்[illegible]கரையில் விநாயகரை பிரதிஷ்டைபண்ணியும் ஆறுமுகக்கடவு[illegible]யைப் பெற்றார்கள்.

மாதந்தோறும் கார்த்திகையிலும் திங்கள் வெள்ளிக் கிழமைகளிலும் சஷ்டி திதியிலும் சரவணப்பொய்கை தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி மலையைப்பிரதக்ஷிணம் வந்து தோகையடிவிநாயகர் இடும்பன் முதலிய பரிவாரங்களை தெரிசித்துப்பின்பு வள்ளிதேவநாயகியோடு கூடிய ஆறுமுகக்கடவுளை தெரிசித்தவர்கள் நினைத்த காரியத்தைப் பெறுவார்கள் என்று சூதமுனிவர் நைமிசாரண்ணியவாசியான ரிஷிகளுக்குத் திருவாய்மலர்ந்தருளினர்.

## இடும்பன் சரித்திரம்.

கலிங்கதேசத்தில் உண்டான இடும்பன் என்ற அசுரன் வயிற்று வலியினல் வருந்தி எவராலும் தீராமல் இந்தக்குன்னக்குடியின் மகிமையை அறிந்து கிரவுஞ்சமலையை காவடியாகக் கொண்டுவந்து ஆறுமுகக்கடவுளுக்குப் பிரார்த்தனையை நிறைவேற்றி வயிற்றுவலி நீங்கி இவ்விடத்திலேயே மலையின்மீது பக்தகோடிகளில் ஒருவராக நின்று விளங்கிக்கொண்டிருக்கிறார்.

அனேகர் அக்கினிக்காவடி சோதனைகள் முதலிய விசித்திரக்காவடிகளையும் அனேக தானிய சாமான்களையும் கொண்டு வந்து அவர் சன்னதியில் பிரார்த்தனை நிறைவேற்றுகிறார்கள். அனேகஞ்சிதறுதேங்காய்கள் உடைபட்டும் வருகின்றன. பக்தர்கள் உத்தேசித்த காரியங்கள் நிறைவேற்றிவருதல் யாவரும் அறிந்தவிஷயமே.

மயூரகிரி ஸ்தல புராண
சங்கிரக வசனம்
சம்பூர்ணம்.

# குன்றக்குடி திருப்புகழ்.

(1) பிறர்புகழின்சொற் பயிலுமிளந்தைப்
பருவமதன்கைச் சிலையாலே
பிறவிதருஞ்சிக் கதுபெருகும்பொய்ப்
பெருவழிசென்றக் குணமேவி
சிறுமைபொருந்திப் பெருமைமுடங்கிச்
செயலுமழிந்தற் பமதான
தெரிவையர்தங்கட் கயலைவிரும்பிச்
சிலசிலபங்கப் படலாமோ
செறுவிதவஞ்சக் கபடமொடெண்டிக்
கிளுமெதிர்சண்டைக் கெழுசூரன்
கிளையுடன்மங்கத் தலைமுடிசிந்தக்
கிழிபடதுன்றிப் பொருதோனே
குறுமுனியின்பப் பொருள்பெற அன்றுற்
பனமனுவஞ்சொற் குருநாதா
குலகிரி துங்கக் கிரியுயர்குன்றக்
குடிவளர்கந்தப் பெருமானே.

(1)

(2) அழகெறிந்தசந்த்ர முகவடங்கலந்த
அமுதபுஞ்ச இன்சொல் மொழியாலே
அடிதுவண்டதண்டை கலிலெனும்சிலம்பொ
டணிசதங்கைகொஞ்சு நடையாலே
சுழிபெறிந்தநெஞ்சு சுழலநஞ்சணைந்து
தொடுமிரண்டுகண்க ளதனாலே
துணைநெருங்குகொங்கை மருவுகின்றபெண்கள்
துயரையென்றொழிந்து விடுவேனோ
எழுதுகும்பகன்பினிளையதம்பி
யெதிரடைந்திறைஞ்சல் புரிபோதே

இதமகிழ்ந்திலங்கை யசுரரந்தரங்க
மொழியவென்றகொண்டல் மருகோனே
மழுவுகந்தசெங்கை அரனுவகந்திறைஞ்ச
மனுவியம்பிநின்ற குருநாதா
வளமிகுந்தகுன்ற நகர்புரந்துதுங்க
மலைவிளங்கவந்த பெருமாளே.
(2)

(3) கடினதடகும்பநேரென
வளருமிருகொங்கைமேல்விழு
கல்விதருகின்றமாதரோ டுறவாடிக்
கனவளகபந்தியாகிய
நிழல்தனிலிருந்துதேனுமிழ்
கனியிதழைமென்றுதாடனை செயலாலே
துடியிடை நுடங்கவாள்விழி
குழைபொரவிரம்பமூடிய
துகில் நெகிழ வண்டுகோகில மயில்காடை
தொனியெழ விழைந்துகூரிய
கொடுநகமிசைந்து தோள்மிசை
துயிலவச இன்பமேவுத லொழிவேனோ
இடிமுரசறைந்து பூசல்செய்
அசுரர்கள்முறிந்துதூளெழ
எழுகடல்பயந்துகோவென அதிகோப
எமபடரு மென்செய்வோமென
நடுநடுநடுங்கவேல்விடு
இரணமுக சண்டமாருத மயிலோனே.
வடிவுடைய அம்பிகாபதி
கணபதி சிறந்துவாழ்தட
வயவி னகர் குன்றமாநக ருறைவோனே
வகைவகைபுகழ்ந்துவாசவன்
அரிபிரமர் சந்த்ரசூரியர்
வழிபடுதல் கண்டுவாழ்வருள் பெருமாளே.
(3)

(4) நாமேவுகுயிலாலு மாமாரனயிலாலு
நாடோறுமதிகாயும் வெயிலாலும்
நார்மாதர்வசையாலும் வேயூதுமிசையாலும்
நாடாசைதருமோக வல்லூடே
ஏமாறிமுழுநாளும் மாலாகிவிருதாவி
லேவாரும் விழிமாதர் துயரூடே
ஏகாமலழியாத மேலானபதமீதி
லேகியுனுடன்மேவ் அருள்தாராய்
தாமோகமுடனூறு பால்தேடியுரவாடு
தோனேறிவிளையாடு மொருபோதில்
தாயாகவருசோதை காணாதுகளவாடு
தாமோதரன்முராரி மருகோனே
மாமாதுவனமாது கார்மேவுசிலைமாது
மாலாகிவிளையாடு புயவீரா
வாணாடுபுகழ்நாடு தேனாறுபுடைசூழு
மாயூரகிரிமேவு பெருமாளே.

(4)

(5) நேசாசாராடம்பரமட்டைகள்
பேசாதேயே சுங்களமட்டைகள்
நீசாளோடேயும்பழகிக்கவர் பொருளாலே
நீயேநானே யென்றொருசத்தியம்
வாய்கூசாதோதுங்கபடத்திகள்
நேராலேதா நின்றுபிலுரிகள் ஏவர்மேலும்
ஆசாபாசாதொந்தரையிட்டவர்
மேல்வீழ்வார்பால்சண்டிகள்கட்டழ
காயோமீதோவெங்குமினுக்கிகள் வெகுபோகம்
ஆகாதாவேசந்தருதிப்பொழு
தேகோவாவாவென்றுபுகட்டிகள்
ஆகாமோகாவம்பிகள்கிட்டினு முறவாமோ
பேசாதோபோய் நின்றுறியிற்றயிர்
வாயசவாவாவென்றுகுடித்தருள்
பேராலேநீள்கஞ்சன்விருத்தெதிர் வருதூது

பேழ்வாய்வேதாளம்பகடைப்பகு
வாய்நீமோனுளுஞ்சரளத்தொடு
பேயாவும்போர்வென்றெதிரிட்டவன் மருகோனே
மாருடாடாடுப்பகையைப்பகை
சூராரோடேவன்செருவைச்செரு
மாசூராபாரெங்குடலப்பொலி முருகோனே
வானாடேழ்நாடும் புகழ்பெற்றிடு
தேனாறேசூழ் துங்கமிலப்பதி
மாயூராவாழ்குன்றைதழைத்தருழ் பெருமாளே.

(5)

(6) கருபனிலெகுலையவிகல்மிகுபகடின்வலியுடைய
தந்தத்தினைத்தடிவ தொந்தத்திரத்தையுள
அகிலமறை புகழ்பரமர்ஞெகிழிகலகலகலெனும்
அம்பொற்பதத்தர்தனு வம்பொற்பொருப்படர்ப
களபபரிமளமெழுதமெழிலில்முழுகுவமுளரி
அஞ்சப்புடைத்தெழுவவஞ்சக்கருத்துமத னபிஷேகம்.

கடிவபடுகொலையிடுவகொடியமுகபடமணிவ
வின்பச்சுடர்க்கனக கும்பத்தரச்செருவ
பிருதில்புளகித சுகமுமிருதுளமும்வளரிளைஞர்
புந்திக்கிடர்த்தருவ பந்தித்தகச்சடர்வ
கயல்மகரநிகரமிக வியன்மருவுநதியில்முதிர்
சங்கிப்பிமுத்தணிவபொங்கிக்கனத்தொளிர்வ முலைமாதர்.

வகுளமலர்குவளையிதழ்தருமணமுமிருகமத
மொன்றிக்கருத்துமுகில் வென்றிட்டுநெய்த்தகுழ
லசையருசியமுர்தக்ருத வசியமொழிமயில்குயிலெ
னும்புட்குரற்பகரவம்புற்றமர்புரிய
வருமறலியறணமொடுமுடுகுசமர்விழியிணைகன்
கன்றிச்சிவக்கமகிழ்நன்றிச்சமத்துநக நுதிரேகை.

வகைவகைமெயுறவளைகள்கழலவிடைதுவளவித
　　முண்டுட்ப்ரமிக்கநகைகொண்டுற்றணைத்தவகி
செறிகலவிவலையிலெனதறிவுடையகலைபடுத
　　லுந்திப்பிறப்பறநினைந்திட்டமுற்றுனடி
வயிலிநகர்முருகசெருமுயல்பனிருகரகுமர
　　துன்றட்டசிட்டகுணகுன்றக்குடிக்கதிப அருளாதோ.

தகுகுதகுதகுதகுகு திகுகுதிகுதிகுதிகுகு
　　தங்குத்தகுத்தகுகு திங்குத்திகுத்திகுகு
சகணசகசகசகண செகணசெகசெகசெகண
　　சங்கச்சகச்சகண செங்கச்செகச்செகண
தனனதனதனதன்ன தெனனதெனதெனதெனன
　　தந்தத்தனத்தனன தெந்தத்தெனத்தெனன தனனா.

தகுததகுதகுதகுதி திகுதிதிகுதிகுதிகுதி
　　தங்குத்தகுத்தகுகு திங்குத்திகுத்திகுகு
டணணடணடணடணண டிணிணிடிணிடிணிடிணிணி
　　டண்டட்ட டட்டடண டிண்டிட்டி டிட்டிடிணி
தரரதரதரதரர திரிரிதிரிதிரிதிரிரி
　　தன்றத்தரத்தார தின்றித்திரித்திரிரி யெனதாளம்.

தொகுதிவெகுமுரசுகரடிகைடமருமழுவுதவில்
　　தம்பட்டமத்தளமினப்பட்டடக்கைபறை
பதலைபலதிமிலைமுதலதிரவுதிர்பெரியதலை
　　மண்டைத்திருட்பருகுசண்டைத்திரட்கழுகு
துடர்நிபிடகருடனடர் தரகரடமொகுமொகென
　　வந்துற்றிடக்குடர்நிணந்துற்றிசைத்ததிர முதுபேய்கள்

கனகநரிநெறுநெறெனவினிதினிதுதினவினைசெய்
　　வெங்குக்குடத்த கொடிதுங்குக்குகுக்குகென
வடனமிடுதிசைபரவி நடனமிட்வடவிரவி
　　திங்கட்ப்ரபைக்கதிர்கள் மங்குப்ரசித்தகுல
துரககஜரதகடக முர்ணரணநிருதர்விரல்
　　மிண்டைக்குலைத்தமர்செய்தண்டர்க்குரத்தையருள்
　　　　பெருமாளே

சிவமயம்.

# திருக்கோளக்குடி ஸ்தல புராண சங்கிரக வசனம்.

---

சூதமுனிவர் நைமிசாரண்ணியவாசியான ரிஷிகளுக்கு திருக்கோளக்குடிப்புராணத்தைச் சொல்லுகிறார்.

திருக்கைலாசத்தில் சிவதீர்த்தக்கரையில் பார்வதி தேவியோடுகூட சிவபெருமான் ரத்னசிம்மாசனத்தில் விளங்கிக்கொண்டிருக்கும்பொழுது ஸகல தேவர்களும், ரிஷிகளும் சிவபெருமானை வணங்கி, இதுபோல பூலோகத்திலும் எந்த இடத்தில் கண்டு தெரிசிப்போம் என்று கேட்க சிவபிரானும் பாண்டிய நாட்டில் கைலாசத்துக்கு சமமான நெல்லிவனம் என்ற திருக்கோளக்குடியில் இங்கு தெரிசித்த காக்ஷியைப்போலவே பூமி அந்தர ஸ்வர்க்க முதலிய மூன்று இடங்களிலும் தெரிசித்து வேண்டிய வரத்தைப் பெருவீர்களாக என்று திருவாய்மலர்ந்தருள அதுபோல் சுகோள முனி முதலிய ரிஷிகளும் தேவர்களும் திருக்கோளக்குடியை அடைந்து

பூமியில்

மரகதவல்லிசமேத சத்தியவாகீசரையும்

மத்தியில்

சிவகாமவல்லிசமேத சிவதருமேசரையும்

ஸ்வர்க்கத்தில்

ஆவுடைநாயகிசமேத மலைக்கொழுந்தீசரையும்

விதிப்படி தெரிசித்து வேண்டிய வரத்தைப்பெற்றார்கள்.

இந்த க்ஷேத்திரத்தில் மலையின்மீது சிவதருமேசர் ஆலயத்துக்கு தென்பக்கத்தில் தவளைகள் இல்லாத சுனை ஒன்று இருக்கிறது. அந்த தவளை பட்டாச்சுனையானது மகிமை உள்ள தீர்த்தம்.

அகஸ்த்தியர், புலஸ்த்தியர் இருவரும் காவேரி, தாம்பிரபரணி, கோதாவரி முதலிய தீர்த்தங்களால் சிவதருமேசர் முதலிய

மூர்த்திகளுக்கு அபிஷேகஞ்செய்து தீர்த்தங்களைச் சுனைவடிவ மாக்கி இருவரும் அவ்விடத்தில் சிவபெருமான் அபிஷேகத்துக்கு உபயோகமான பழங்களைக்கொடுக்கக்கூடிய பிலாமரங்களாக இப்பவும் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

சப்த கன்னிகைகளும் இவ்விடத்தில் சிவபெருமான் அபிஷேகத்துக்கு உபயோகமான தேன்ராட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

விநாயகர், சுப்பிரமணியர், லக்ஷ்மி, பதஞ்சலி தூர்வாச முனிவர், ககோள முனிவர், பிரம்மா, சரஸ்வதி, இந்திராணி, தேவேந்திரன், வயிரவர், சப்தரிஷிகள், சூரிய, சந்திரர்கள் முதலிய வர்களும், திலீபராஜனும், சவுந்தரபாண்டி ராஜனும், பூமி அந்தர ஸ்வர்க்கங்களில் விளங்கும் மூர்த்திகளை தெரிசித்தும் அனேக திருப்பணிகளைச்செய்தும் மேன்மையை அடைந்தார்கள் என்று சூதமுனிவர் நைமிசாரண்ணியவாசிகளுக்கு திருவாய்மலர்ந் தருளினர்.

திருக்கோளக்குடி ஸ்தல புராண
சங்கிரக வசனம்
சம்பூர்ணம்.

உ

அம்பாள் துணை.

# தேனுக்ஷி அம்மன் கோவில் ஸ்தல புராண சங்கிரக வசனம்.

---

கைலாசத்தில் சிவபெருமானிடத்தில் தேவர்கள் பண்டாசுரனின் கொடுமை சகிக்கமுடியவில்லை. அதை நிவர்த்திக்கவேணும் என்று பிரார்த்தித்துத்தெரிவிக்க, சிவபிரானும் பத்திரகாளியை அனுப்பி பண்டாசுரனை ஸம்ஹரித்து தேவர்களைப் பாதுகாத்துக்கொண்டு பாண்டியநாட்டில் குன்னக்குடிக்குத்தென்மேற்கில் நான்குமைல் தூரத்தில் இருக்கிற வனத்தில் வடக்கு முகமாக இருந்து கொண்டு விளங்குவாயாக என்று உத்திரவு செய்ய.

அவ்விதமே பத்திரகாளியும் தேனுக்ஷி அம்மன் என்ற பெயரோடு தேவர்களோடு சென்று பண்டாசுரனை ஸம்ஹரித்து சிவபிரான் உத்திரவு செய்த இடத்தில் வந்து சக்தி என்ற தீர்த்தத்தை உண்டுபண்ணி அந்த வனத்திற்கும் தேனுக்ஷி அம்மன் கோவில் என்ற பெயரையும் வைத்து விளங்கிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் தேவர்களும் முனிவர்களும் அரசர்களும் வந்து பூஜித்துக் கோவிலுங்கட்டிவைத்து பூமிகளையும் கொடுத்து சைத்திரோத்ஸவமும் நடத்தி வேண்டிய வரத்தை அடைந்தார்கள்.

இப்பவும் அனேக வைசியர்கள் அடிமைகளாக இருந்துகொண்டு வருகிறார்கள். கருப்பர் முதலிய தேவதைகளும் அம்பாள் சன்னிதானத்தில் விசேஷ மகிமையோடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

தேனுக்ஷி அம்மன் கோவில்
ஸ்தலபுராண சங்கிரக
வசனம்.
சம்பூர்ணம்.

---